[2019 பிப்ரவரி 11

இந்த நிதியாண்டிலேயே அந்த வட்டார பகுதிநேர மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைத்துத் தரப்படும், நிரந்தரக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவித்தமைக்கு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

குடமுழுக்கு

***36043—திரு. கே.வி. சேகரன்**:

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, நெடுங்குணம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீராமச்சந்திரப் பெருமாள் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதி, சேத்துப்பட்டு வட்டம், நெடுங்குணம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீராமச்சந்திரப் பெருமாள் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்திட தொல்லியல் வல்லுநர் குழுவின் கருத்து பெறப்பட்டுள்ளது. இக்கருத்துமீது விழுப்புரம் மண்டல வல்லுநர் குழு மற்றும் உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் ஒப்புதல் பெற்று மதிப்பீடு

2019 பிப்ரவரி 11]

தயாரிக்கப்படவுள்ளது. மதிப்பீடு தயார் செய்தபின், திருக்கோயில் திருப்பணிக்கு அரசு நிதியைப் பெற்று, இவ்வாண்டுக்குள் குடமுழுக்கு நடத்த மாண்புமிகு அம்மாவின் அரசால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.*

திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதியில் நெடுங்குணம் ஊராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீராமச்சந்திரப் பெருமாள் திருக்கோயில் சிறப்பு வாய்ந்தது. இத்திருக்கோயிலுக்கு 2002 ஆம் ஆண்டு குடமுழுக்கு செய்யப்பட்டது. குடமுழுக்கு செய்து 18 ஆண்டுகள் கடந்தபடியால் இத்திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை தனியார்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். இந்தச் சொத்துகளை மீட்டு, இத்திருக்கோயிலுக்கு வருமானத்தை ஈட்டித்தர அரசு முன்வர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், நெடுங்குணம் அருள்மிகு ஸ்ரீராமச்சந்திரப் பெருமாள் திருக்கோயிலுக்கு 13-6-2002 அன்று குடமுழுக்கு நடைபெற்றது. இத்திருக்கோயில் தொன்மைவாய்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் விஜயநகர மன்னர் காலத்தில் கட்டப்பட்டதென தொல்லியல் துறை வல்லுநர் கருத்து தெரிவித்துள்ளார். இத்திருக்கோயிலில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தொல்லியல் துறையால்*

TRUTH ALONE TRIUMPHS

கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் அரசு நிதியுதவிமூலம் திருப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும், பொதுவாக திருக்கோயிலை பழமை மாறாமல் புதுப்பிக்க தொல்லியல் துறையின் கருத்தைப்பெற்று, பின்னர் உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி, மாவட்ட மண்டலக் குழு, மாநில அளவிலான குழு மற்றும் உயர் நீதிமன்ற வல்லுநர் குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே, திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். மேற்கண்ட பணிகளுக்கு நடைமுறைகளைப் பின்பற்றி, மாண்புமிகு உறுப்பினர் கோரிய இத்திருக்கோயிலில் குடமுழுக்கு இவ்வாண்டுக்குள் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 3.71 ஏக்கர் புன்செய் நிலம் மட்டும் உள்ளது. மேற்படி நிலங்கள் தொடர்பாக, போளூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே, தற்போது நிலங்கள்மூலம் வருவாய் இல்லை. இத்திருக்கோயிலில் உண்டியல் உண்டு; வருவாய் ரூ.5,000/- ஆகும். ஆண்டுக்கு இருமுறை உண்டியல் திறப்பு நடைபெறுகிறது. கடைசியாக 22-10-2018 அன்று உண்டியல் திறக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திருக்கோயிலை புனரமைப்பு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அரசு நிதியில் இந்த ஆண்டு செய்து முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதியில் கோயில்களுக்குச் சொந்தமான பல சொத்துகளை தனி நபர்கள் ஆக்கிரமித்து வருகின்றனர். அதே வேளையில் போளூர் பேரூராட்சியில் வீரப்பன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஈஸ்வரன் கோயில் மிகவும் பழமைவாய்ந்த திருக்கோயிலாகும். அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து பல ஆண்டுகளாகியும், இன்றுவரை, தர்மகர்த்தாவின்

2019 பிப்ரவரி 11]

கட்டுப்பாட்டில்தான் இத்திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோயில் சொத்துகளின் வருமானத்தையும், அதைச் சார்ந்த பல சொத்துகளின் வருமானத்தையும், தர்மகர்த்தா அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். எனவே, பொது மக்கள் மற்றும் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க இத்திருக்கோயிலினை முழுமையாக அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருக்கோயிலை பொறுத்தவரையில், ஏற்கெனவே இத்திருக்கோயிலின் தற்போதைய நிலைப்பாடு குறித்து அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. ஆக, அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அந்தக் கோயிலின் தர்மகர்த்தாவை மாற்றுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியிலிருக்கின்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலினுடைய சுற்றுப்பிரகாரம் இடிந்து விழுந்து, அதில் ஒரு பெண்ணும் இறந்ததைத் தொடர்ந்து, அது பழுதடைந்துவிட்டதன் காரணமாக மொத்தமாக உடைத்து, ஏறக்குறைய ஒரு வருடகாலம் ஆகிறது. அந்தச் சுற்றுப்பிரகாரம் இல்லாததன் காரணமாக பக்தர்கள் நடந்து செல்ல முடியவில்லை; பக்தர்கள் மழைக் காலத்தில் ஒதுங்கி நிற்க முடியவில்லை; அசௌகர்யமான ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. மேலும், பிரதட்சணம் செய்கின்ற*

பக்தர்களும் இன்றைக்கு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு வருட காலமாக அந்தச் சுற்றுப்பிரகாரம் கட்டப்படாத நிலை இருக்கின்றது. அதுபோல, அந்தக் கோயிலிலுள்ள பக்தர்கள் தங்குகின்ற 500 அறைகள் பழுதடைந்துவிட்டன என்று மூடிவைத்திருக்கின்றார்கள். அவையும் கட்டப்படாமல் அப்படியே இருக்கின்றன. இது பக்தர்களுக்கு அருள்புரிகின்ற முருகப் பெருமான் கோயில். ஆகையால், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து அந்தப் பணிகளைச் செய்து தருவார்களா என்ற கேள்வியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த சுற்றுப்பிரகார மண்டபத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்த மதிப்பீட்டுக்கு வல்லுநர் குழுவின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. வல்லுநர் குழுவின் வழிகாட்டுதலின்படி, விரைவில் அந்த சுற்றுப்பிரகாரம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் தங்கும் விடுதி பொதுப் பணித் துறையின் உயர் அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டதன்பேரில், அந்த அறைகளில் பக்தர்கள் இனிமேல் தங்க இயலாது என்ற ஒரு சான்றிதழை அவர்கள் கொடுத்துள்ளார்கள். அதையும் சீர் செய்து, இந்த வருடத்தில் 22 கோடி ரூபாய் செலவில் புதியதாக யாத்ரி நிவாஸ் ஒன்றை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதி

2019 பிப்ரவரி 11]

பெற்று, இந்த ஆண்டே அந்தப் பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

பட்டியல் 8 @

1—

தேக்கு மரம் நடுதல்

வினா எண் 41700—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலிருந்து சென்னை சாலையில் கொள்ளிடம் ஆற்றங்கரை பிரியும் சாலை பகுதிகளில் தேக்கு மரங்களை நட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) கும்பகோணம்-சென்னை சாலையில் கொள்ளிடம் ஆற்றங்கரை பிரியும் சாலைப் பகுதியில், கொள்ளிடம் ஆறு மற்றும் குமுக்கி மண்ணியாறு கரைகளில் ஏற்கெனவே தேக்கு மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. கும்பகோணம்-சென்னை சாலையில் இரு ஓரங்களிலும் தேக்கு மரம் நடவு செய்யும் திட்டம் ஏதுமில்லை. மேலும், அணைக்கரை கொள்ளிடம் வலது ஆற்றங்கரையில் தொடக்கத்திலிருந்து 2 கி.மீ. தூரம் மணற்பாங்காக உள்ளதால், தேக்கு மரங்கள் நடவு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

@ இப்பட்டியலிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.